**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

S.C.No. 37 of 2023

Deposition of P.W. 10

Name of the Witness: திரு.சதீஸ்குமார்

Date : 18.09.2025

3ம் எதிரி ஆஜர். 2, 4, 5 எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர், சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

**சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை**

நான் சம்பவத்தின் போது பாப்பாரப்பட்டி வட்ட ஆய்வாளர். வழக்கு பதிவு செய்வதற்கு முன்பாக இண்டூர் காவல் ஆய்வாளர் என்னிடம் எந்த தகவலும் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் 7.3.2020 அன்று இரவு 01.00 மணிக்கு நடந்தது என்றால் சரிதான். காலை 10.30, 11மணிக்கு உதவி ஆய்வாளர் என்னிடம் தெரிவித்தார். முதல் தகவல் அறிக்கை நகல், புகார் ஆகியவற்றை ஆய்வாளர் என்னிடம் ஒப்படைத்தார். சம்பவ இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் சுமார் 6 கிமீ தூரம் இருக்கும். வாகனத்தில் போனால் காவல் நிலையத்திலிருந்து சம்பவ இடத்திற்கு 1/2 மணி நேரத்தில் போய்விடலாம். எனக்கு வழக்கு கோப்புகள் 1 மணிக்கு கிடைத்தது. நான் சம்பவ இடத்திற்கு 2.30மணிக்கு போனேன். இந்த வழக்கு அமர்வு நீதிமன்றத்தால் விசாரிக்க கூடிய வழக்கு என்றால் சரிதான். நான் அன்றைய தினம் வேறு அலுவலில் இருந்ததால் உடனடியாக சம்பவ இடத்திற்கு

போகமுடியவில்லை. என்ன அலுவலில் இருந்தேன் என்று தற்போது என்னால் சொல்ல இயலாது. நான் போன போது சம்பவ இடத்தில் புகார் கொடுத்தவர் அங்கில்லை.

2) பாதிக்கப்பட்ட முனியப்பன் எனக்கு சம்பவ இடத்தை அடையாளம் காட்டினார். இபி அலுவலகத்திலிருந்து ஸ்டாக் ரிஜிஸ்டர் குறித்து பாதிக்கப்பட்ட முனியப்பன் சொன்னதை கேட்டு தெரிந்து கொண்டேன். நான் ஸ்டாக் ரிஜிஸ்டரை பார்க்கவில்லை. முனியப்பன் என்னுடைய விசாரணையில் ஸ்டாக் ரிஜிஸ்டரில் என்ன என்ன பொருள்கள் இருந்தது, என்னென்ன பொருள்கள் காணாமல் போனது என்று சொல்லியிருக்கிறாரா என்றால் காணாமல் போன பொருள்கள் பற்றி சொல்லியிருக்கிறார், ஸ்டாக் ரிஜிஸ்டரில் என்னென்ன பொருள்கள் இருந்தது என்று சொல்லவில்லை. முனியப்பன் இபி அலுவலகத்தில் லைன்மேனாக வேலை செய்கிறார். வாட்ச்மேன் அப்போது தனியாக கிடையாது. அந்த குடோன் வாட்ச்மேன் இல்லாமல் தான் செயல்பட்டு வந்தது என்றால் சரிதான்.

3) சாட்சி சம்பத் என்னுடைய விசாரணையில் முனியப்பனுக்கு 10 நிமிடமாக போன் செய்ததாகவும், அவர் எடுக்கவில்லை என்று சொல்லியிருக்கிறார் என்றால் சரிதான். அந்த குடோன் மெயின் ரோடிலே உள்ளது, பெரிய பூட்டு போட்டு பூட்டப்பட்டிருந்தது என்றால் சரிதான். சம்பவத்தின் போது முனியப்பன் ரூமுக்கு உள்ளே தான் இருந்தார். முனியப்பன் அவருடைய விசாரணையில் அவர் ரூமில் இருந்த போது 3

போர் சாவி கேட்டு மிரட்டியதாக சொல்லியுள்ளாரா என்றால் ரூமை விட்டு வெளியே வந்து பார்த்த போது தன்னை மிரட்டி கேட் சாவியை பிடுங்கி கொண்டதாக சொல்லியுள்ளார். இபி குடோனின் சுற்றுசுவரும், கேட்டும் சுமார் *12* அடி இருக்கும் என்றால் சரியல்ல. சுமார் *8* அடி இருக்கும். என்னுடைய வரைபடத்திலும், பார்வை மகஜரிலும் சுற்றுசுவர், கேட் எவ்வளவு உயரம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இபி குடோனின் காம்பவுண்ட் கேட் உள்புறமாக பூட்டப்பட்டிருந்தது. அதை என் பார்வை மகஜரில் காட்டவில்லை என்றால் சரிதான். அவரை தாக்கி பொருள்களை எடுத்து போகும் வரை சத்தம் போடவில்லை என்றால் அவரை சத்தம் போட முடியாமல் மிரட்டி வைத்திருந்தார்கள்.

*4)* முனியப்பன் என்னுடைய விசாரணையில் முகத்தில் மூகமுடி அணிந்து கொண்டிருந்ததாக சொல்லவில்லை, பார்த்தால் அடையாளம் காட்ட முடியும் என்று தான் சொல்லியுள்ளார்கள். குடோனை சுற்றி வெளிச்சமே இல்லை என்றால் சரியல்ல, வெளிச்சம் இருந்தது. பார்வை மகஜரில் போதுமான மின் விளக்குகள் இருந்ததாக காட்டப்படவில்லை என்றால் சரிதான். அது இருட்டான பகுதி என்றால் சரியல்ல. முனியப்பன் சுத்தியால் தாக்கியதால் அது சம்பந்தமாக ஆரம்ப சுகாதார நிலையம் சென்று புற நோயாளியாக சிகிச்சை பெற்றார். அவருக்கு என்ன சிகிச்சை கொடுக்கப்பட்டது என்பது சம்பந்தமாக நான்

மருத்துவரையோ, அது சம்பந்தப்பட்ட எந்த ஆவணத்தையும் நான் கைப்பற்றவில்லை.

5) 7.3.2020ம் தேதி மாலை 4 மணியளவில் சின்னதடங்கம் அரசு தொடக்கபள்ளி அருகே இருந்த டாடா ஏசி வாகனத்தை கைப்பற்றினேன். சட்ட மாறுதல் அறிக்கையில் டாடா ஏசி வாகனம் அருகே நின்று கொண்டிருந்தவர்கள் முன்னுக்கு பின் முரணாக சொன்னதால அவர்களை 4.15மணிக்கு கைது செய்து 4.30மணிக்கு இண்டூர் காவல் நிலையம் அழைத்து சென்று 4.45மணிக்கு ஒப்புதல் வாக்குமூலம் பதிவு காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் சட்ட பிரிவு மாறுதல் அறிக்கையில் முன்னுக்கு பின் முரணாக சொன்னதால் எதிரிகளை கைது செய்ததாக சொல்லிவிட்டு தற்போது குற்றத்தை ஒப்பு கொண்டதாக மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

6) ஸ்டாக் ரிஜிஸ்தரில் தான் எவ்வளவு பொருள்கள் இருக்கும் என்றும், எவ்வளவு பொருட்கள் காணாமல் போனது பற்றி தெரிந்து கொள்ள முடியும் என்றால் சரிதான். ஆனால் நான் ஸ்டாக் ரிஜிஸ்தரை கைப்பற்றவில்லை. சம்பவம் நடைபெறுவதற்கு முன்பாகவே அதில் குறிப்பிட்டுள்ள பொருள்கள் இல்லை என்றால் சரியல்ல. அந்த ஸ்டாக் ரிஜிஸ்டரை கைப்பற்றினால் வழக்கின் உண்மைநிலை தெரிந்து விடும் என்பதால் தான் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. ஒரு கம்பி ரோல் எவ்வளவு நீளம், எவ்வளவு எடை என்று கைப்பற்றுதல் மகஜரில்

குறிப்பிட்டுள்ளேனா என்றால 1060 கிலோ கம்பிகள் கைப்பற்றப்பட்டதாக சொல்லியுள்ளேன். நான் எடை போடாமல் பார்த்து தான் தெரிந்து கொண்டேன். நான் எடை போடாமல் 1060 கிலோ என்று சொல்வது ஏற்றுகொள்ள கூடியதல்ல என்றால் சரியல்ல. 1060 கிலோ எடை என்று கைப்பற்றுதல் மகஜரில் ஒயிட்னர் வைத்து திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். படிவம் 91ல் இடை சொருகலாக 1060 கிலோ என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிபார்த்து திருத்தப்பட்டது.

7) இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட டாடா ஏசி வண்டி 06.03.2020 இரவு 20.51மணிக்கு கிருஷ்ணகிரி டோல்கேட்டை கடந்து பெங்களூருக்கு சென்றது என்றால் சரியல்ல, பெங்களூரிலிருந்து கிருஷ்ணகிரி நோக்கி வந்து கொண்டிருந்தது. சாட்சியிடம் அ.சா.ஆ.10 டோல்கேட் ரசீதை காட்டி கேட்ட போது அது பெங்களூரிலிருந்து கிருஷ்ணகிரி நோக்கி வந்து கொண்டிருந்ததாக சொல்கிறார். இந்த வாகனம் கிருஷ்ணகிரி டோல்கேட் நோக்கி போனதற்கு கிருஷ்ணகிரி டோல்கேட் நிர்வாகத்தை சேர்ந்தவர்களை விசாரிக்கவும் இல்லை, ஆவணத்தை வாங்கவும் இல்லை. கிருஷ்ணகிரி டோல்கேட் என்.எச் 47 என்றால் நியாபகம் இல்லை. ஆனால் அ.சா.ஆ.10 என்.எச் 7 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

நான் இந்த வழக்கில் எதிரிகளை சொன்ன நேரத்திலும், சொன்ன விதத்திலும் கைது செய்யவில்லை என்றும், அதன் அடிப்படையில் எந்த

சான்று பொருளும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. சுத்தி வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் விசாரித்து பதிவு செய்த சாட்சிகளின் வாக்குமூலங்களை மார்ச் மாதத்தில் நடந்த சம்பவத்திற்கு ஒரு மாதம் கால தாமதமாக ஏப்ரல் மாதம் தான் நீதிமன்றத்திற்கு அனுப்பினேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் வழக்கு கோப்புகளை நான் வேறு ஆய்வாளருக்கு ஒப்படைத்து விட்டேன், நான் குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யவில்லை. சம்பவ இடத்திலிருந்து கைரேகை எதுவும் கைப்பற்றி நிபுணருக்கு அனுப்பவில்லை, மோப்ப நாய் வரவழைத்து விசாரணை செய்யவில்லை. எதிரிகளை கைது செய்த பிறகும் சுத்தியில் உள்ள கைரேகைகளை கைப்பற்றி கைரேகை நிபுணருக்கு அனுப்பவில்லை. நான் சரிவர விசாரிக்காமல் அவசர ரீதியாக எதிரிகள் மீது குற்றம் சுமத்தியிருக்கிறேன் என்றால் சரியல்ல.